**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.37/2016

வாதி தரப்பு 2வது சாட்சி அப்பாசாமி என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. அப்பாசாமி | வயது | : | 80/23 |
| தகப்பனார் பெயர் | : | ஆண்டியப்பன் | தாலுகா | : | விராலிமலை |
| கிராமம் | : | காரப்பட்டு | தொழில் | : | விவசாயம் |

நாள்-23.03.2026

வா.சா.2

**<u>6 மற்றும் 14 முதல் 17 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) **எனக்கு** நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை.

2) வழக்கு விபரங்களை பழனிச்சாமி சொல்லித்தான் என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான்.

3) முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நான் தெரிந்துகொண்டேன்.

4) வழக்கு பழனிச்சாமி போட்டுள்ளார். பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

5) எந்த சொத்துக்களுக்கு பாகப்பிரிவினை கேட்டுள்ளார் என்றாலும், அதன் சர்வே எண்கள், விஸ்தீரணம் எவ்வளவு என்றும் எனக்கு தெரியாது.

6) வழக்கு சொத்துக்கள் காரப்பட்டு, நீரபழனி ஆகிய ஊர்களில் உள்ளது. மேற்படி ஊர்களில் உள்ள சொத்துக்களுக்குத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

7) வீராச்சாமி பெட்ரோல் பங்க், கேஸ் ஏஜென்ஸி, அரசு ஒப்பந்தக்காரர், ரியல் எஸ்டேட், விவசாயம், ஒயின் ஷாப் மற்றும் பார் போன்ற பல்வேறு தொழில்கள் செய்து வந்தார் என்றால் சரிதான். அவரது மகன் முத்து சிவில் இன்ஜினியர் என்றால் சரிதான்.

8) வழக்கு சொத்துக்களில் எது பொதுக்குடும்ப சொத்து என்று எனக்கு தெரியாது. விவசாய சொத்துக்களில் விவசாயம் செய்யப்படாமல் புல் மண்டி கிடக்கிறது என்றால் சரிதான்.

9) வாதி எனக்கு மாமா. வழக்கு சொத்துக்கள் ராம விற்பன்னருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதையும் நான் பார்க்கவில்லை.

மு.மா.அ.நீ,

10) நான் சொல்வதுபோல் வாய்மொழியாக பாகப்பிரிவினை எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வாதி சொல்லி கொடுத்து 55 வருடங்களுக்கு முன்பு வாய்மொழியாக பாகப்பிரிவினை நடைபெற்றதாக நான் உண்மைக்கு மாறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

11) வீராச்சாமி பெயரில்உள்ள சொத்துக்கள் 30 வருடங்களுக்கு முன்பு வாங்கப்பட்டது. வீராச்சாமியின் தகப்பனார் 2004-ல் இறந்தார் என்றால் சரிதான். வீராச்சாமிதான் குடும்ப தலைவராக இருந்து, பூர்வீக சொத்துக்களில் இருந்து வந்த வருமானத்தைக்கொண்டு, அவரது பெயரில் அவரது மனைவி மற்றும் மகன் பெயரில் கிரையம் வாங்கினார் என்று வாதி சொல்லிக்கொடுத்ததன் பேரில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

12) பழனிச்சாமியின் ˙உடன்பிறந்த சகோதரிகள் செல்லக்கண்ணு, லெட்சுமாயி, அஞ்சலை ஆகியோர் 40 வருடங்களுக்கு முன்பே திருமணமாகி பேரக்குழந்தைகள் எடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

13) பழனிச்சாமி, வீராச்சாமிக்கு திருமணமாகி குழந்தைகள் பிறந்து பேரக்குழந்தைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். இருவரும் தனித்தனியாக குடியிருந்து, தனித்தனியாக குடும்ப அட்டை வைத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

14) நான் சொல்வது போல் கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்றும், கூட்டுக்குடும்ப இருப்பதாக சொல்வதும் உண்மையல்ல என்றாலும், வாதி பழனிச்சாமி கேட்டுக்கொண்டதற்கிணங்க உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

15) தாவா சொத்துக்கள் வீராச்சாமி மற்றும் அவரது மகனின் தனிப்பட்ட வருமானத்தைக்கொண்டு வாங்கப்பட்டது என்றாலும், அவர்களது தனிப்பட்ட சொத்துக்களையும் சேர்த்து வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும், வாதிக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.